|---|---|---|---|---|---|---|---|
| 2016(A/L) | 36 | 97 | 51 | 05 | 38 | 83 | 310 |
| 2017(A/L) | 40 | 113 | 52 | 04 | 40 | 52 | 301 |
| 2018(A/L) | 39 | 106 | 60 | 03 | 33 | 39 | 280 |
| Total | | | | | | | 891 |

**Total No of Students = 1477 + 891 = 2368**

**JHC Staff Count**

| | |
|---|---|
| **Academic staff** | 108 |
| **Non- Academic staff** | 14 |

# AUTO SMART

*THE SCIENCE OF EXCELLENCE*

## Where to Buy AUTO SMART Products?

**Head Office: Kim or Dave 02 4975 1488,**
**Fax 02 4975 1499**
**Sales: Adrian Sykes 0414 652 349**
**Luke Sykes 0410 839 781**

### Victoria

| | | |
|---|---|---|
| Bendigo - Mildura | Mark Schembri | 0400 571 002 |
| Albury - Shepparton | Geoff Romero | 0417 452 935 |
| Geelong | Brad Anderson | 0411 600 887 |
| West Melbourne | Brad Anderson | 0411 600 887 |
| North Melbourne | Doug Wilson | 0411 600 884 |
| East Melbourne | Clive Ablitt | 0407 822 446 |
| East Melbourne | Luke Ablitt | 0408 149 225 |
| Melbourne South | Paul Bright | 0417 600 888 |
| Frankston | Ron Bright | 0408 600 888 |

### NSW

| | | |
|---|---|---|
| Coffs Harbour | David Buckley | 0412 922 707 |
| Dubbo | Gary Bennett | 0427 681 961 |
| Tamworth | Wayne Anderson | 0427 424 211 |
| Newcastle | Gordon Richards | 0416 299 880 |
| Gosford | Woltek Szczypior | 0411 590 276 |
| North Sydney | John Szczypior | 0415 273 344 |
| Bankstown | Geoff Stibbard | 0425 251 935 |
| South Sydney | Geoff Stibbard | 0425 251 935 |
| Wollongong | Wayne Markham | 0414 662 966 |

### South Australia

| | | |
|---|---|---|
| Adelaide North | Derek Tubb | 0403 063 400 |
| Adelaide South | (Derek Tubb) | 0403 063 400 |

### Tasmania

| | | |
|---|---|---|
| Hobart | Don Jamieson | 0417 962 901 |
| Lauhceston | Lee Crocker | 0429 771 088 |

### Queensland

| | | |
|---|---|---|
| North Qld | Doug Guiver | 0412 621 341 |
| Rockhampton | Alan Thomnson | 0414 360 864 |
| North Brisbane | Adrian Dutney | 0408 069 269 |
| Ipswich | Wayne MacKenzie | 0414 432 476 |
| South Brisbane | Geoff Green | 0400 099 962 |
| Gold Coast | Mike Huahes | 0411 241 909 |

### Northern Territory

| | | |
|---|---|---|
| Darwin | Chace Karpenko | 0410 456 766 |

### ACT

| | | |
|---|---|---|
| Canberra | Michael Maguire | 0407 009 630 |

ENVIRONMENT ★ PROJECT ★

**WORKING TO REDUCE OUR CARBON FOOTPRINT**


Raja Tasty Foods
Indian & Sri Lankan Foods
Raja Tasty Foods Indian & Sri Lankan Foods
155c Cleeland st Dandenong Vic 3175
Ph : 97924817
Mob: 0451 258 958
Eat in or Take Away
VISIT US FOR
HOPPER NIGHT
ON SUNDAYS & WEDNESDAYS AFTER 4PM
LUNCH SPECIAL
11.00am - 2.00pm
$6
Rice + 1 Meat
+ 2 Vegies
OPEN 6 DAYS A WEEK
Tue : 9am - 9pm
Wed - Sun : 9am - 10pm
WE CATER FOR ALL FUNCTIONS
FOR FURTHER DETAILS
CALL US ON
(03) 9792 4817
0451 258 958

WE WOULD LIKE TO CONVEY ALL OUR VERY BEST WISHES TO

THE JAFFNA HINDU COLLECE OBA OF VICTORIA AUSTRALIA

AND IT'S MEMBERS

FROM ALL OF US AT:

**A.V. Murugiah, T. Murugiah, P. Guy**

**AARAN MURRAY & CO,**

**CHARTERED ACCOUNTANTS.**

SITE 1-2, No 22 HAZELWOOD ROAD, MORWELL, VIC, 3840.

**TEL: (03) 5134 2711**

With best compliments from....

**James Street**

**Medical Centre**



Dr. Anne Sellathurai

M.B.B.S., F.R.A.C.G.P.

11/63, James Street, Dandenong, VIC 3175

Ph: 03 9793 1962, Fax: 03 9793 1924, Email: jsmc_anne@hotmail.com

## யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மாணவர்களின் கற்றல் இடர்பாடுகள் – ஓர் அனுபவப் பகிர்வு

***அறத்தினூஉங்கு ஆக்கமும் இல்லை அதனை***

***மறத்தலின் ஊங்கில்லை கேடு.***

(அறம் செய்வதை விட நன்மையும் இல்லை. அதைச் செய்ய மறப்பதைவிட கெடுதியும் இல்லை.)

யாழ் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் – அவுஸ்திரேலியா விக்டோரியா கிளை பாதிக்கப்பட்ட பிற பாடசாலை மாணவர்களது தேவைகளைக் கண்டறிந்து அவர்களுக்கு கற்றலுக்கான உதவிகளை வருடாந்தம் செய்துவருகின்றது. அதன் பிரகாரம் இவ்வாண்டு யுத்தத்தினால் கடுமையாகப் பாதிக்கப்பட்ட வன்னிப் பகுதியில் மிகுந்த சிரமங்களுக்கு மத்தியில் இயங்கிக் கொண்டிருக்கும் பல பாடசாலைகளில், சிலவற்றைத் தெரிவுசெய்து அங்குள்ள மாணவர்களின் கற்கைகுத் தேவையான உதவிகளைக் கடந்த யூலை மாதம் வழங்கினர். எம்மால் இந்தப் பாடசாலைகளுக்கு ரூபா 318,281/- (AUD3,000/- approx.) பெறுமதியான துவிச்சக்கரவண்டிகள், கற்றல் உபகரணங்கள், சீருடைகள், மற்றும் கணனி என்பன வழங்கப்பட்டது.

இந்த அன்பளிப்புகளை வழங்க துணுக்காய் வலயத்திலுள்ள பாடசாலைகளுக்கு எமது பழைய மாணவர் சங்கத்தின் பிரதிநிதியாக நேரில் சென்ற தங்கராஜா ஆதவன் அவர்கள், தனது அனுபவத்தை பகிர்ந்து கொள்கின்றார்.

யுத்தத்தால் பெரிதும் பாதிக்கப்பட்ட முல்லைத்தீவு மாவட்டத்திற்கு உட்பட்ட பாடசாலை மாணவர்களுக்கான உதவிப் பொருட்களை வழங்குவதற்காக அண்மையில் சென்றிருந்தேன். எனக்கு உதவியாக வட்டுக்கோட்டை இந்து வாலிபர் சங்க அங்கத்தவர்களை உடன் அழைத்துச் சென்றேன்.




முல்லைத்தீவு மாவட்டமானது துணுக்காய் வலயம் முல்லைத்தீவு வலயம் என இரண்டு கல்வி வலயங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இதில் துணுக்காய் வலயத்தில் அறுபத்தியொரு பாடசாலைகளும், முல்லைத்தீவு வலயத்தில் அறுபத்திமூன்று பாடசாலைகளும் உள்ளன. யாழ் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் - அவுஸ்திரேலியா விக்டோரியா கிளை துணுக்காய் வலயத்தில் இருந்து சுமார் பதினைந்திற்கு மேற்பட்ட பாடசாலைகளைத் தெரிவு செய்திருந்தது. அந்த பாடசாலை அதிபர்களினால் அங்கு பயிலும் மாணவர்கள் கற்றல் செயற்பாட்டை முன்னெடுப்பதற்கான கற்றல் உபகரணங்கள் இல்லாது எதிர்கொள்ளும் இன்னல்களும் மிகவும் பாதிக்கப்பட்ட மாணவர்களின் விபரங்களும் எமக்கு அனுப்பிவைக்கப்பட்டன. இவற்றில் ஒன்பது பாடசாலைகளைத் தெரிவுசெய்து கற்றல் உதவிப்பொருட்களை வழங்கினோம். மேற்படி விண்ணப்பத்தில் மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள், சீருடைகள், பாதணிகள், கணனிகள், மற்றும் துவிச்சக்கரவண்டிகள் என்பன கோரப்பட்டிருந்தன.

# P L S LAWYERS

40 Newport Road, Clayton South, VIC 3169
Tel: (+613) 9543 7836/8512 3808
Fax: (+613) 9515 9478

- Going to court is expensive, but you have many options to resolve the disputes
- One point solution for the best opinion to save your money & time
- We have a team of well experience lawyers for your help

| | |
|---|---|
| Divorce & Family Dispute | Commercial & Residential Leases |
| Power of Attorney | Contract of Law |
| Consumer Disputes | Last Wills & Probates |
| Property Disputes | Human Rights |
| Conveyancing | Landlord & Tenant Law |
| Commercial Matters | Traffic / Accident Matters |




| | |
|---|---|
| Divorce & Family Dispute | Commercial & Residential Leases |
| Power of Attorney | Contract of Law |
| Consumer Disputes | Last Wills & Probates |
| Property Disputes | Human Rights |
| Conveyancing | Landlord & Tenant Law |
| Commercial Matters | Traffic / Accident Matters |












இப்பிரதேச மாணவர்கள், பெற்றோர்கள் மற்றும் அதிபர்களுடனான உரையாடல்களில் இருந்து இவ் இன்னல்களுக்கான காரணம், இறுதி யுத்தத்தின் போது குடும்பச் சுமையைத் தாங்கி தலைமை வகித்துவந்த தந்தை, தாய், சகோதரர்கள் கொல்லப்பட்டதோ, அங்கவீனர்களாகியோ அல்லது காணாமற்போனதோ ஆகும். அதிகளவான குடும்பங்களில் கணவனை இழந்த பெண் தலைமை தாங்கும் நிலை காணப்படுகிறது. இம்மாணவர்களில் பெரும் பகுதியினர் வயது முதிர்ந்த உறவுகளுடன் வாழ்ந்து வருகின்றார்கள். அந்த உறவுகள் தள்ளாத வயதினில் ஒரு வேளை உணவிற்குச் சிரமப்படும் நிலை காணப்படுகின்றது. இந்நிலையிலும் தமது பேரன் பேர்த்திகளுக்கு உணவு கொடுத்து பாடசாலைக்கு அனுப்பும் இவர்களால் பாடசாலை உபகரணங்கள் வாங்க முடியாத நிலையை அவர்கள் விளக்கியபோது என் கண்கள் கசிய ஆரம்பித்தது.




இப்பகுதிகளில் உள்ள வீதிகள் அங்கு நடந்த கோரமான யுத்தத்தின் குண்டுத் தாக்குதலாலும் யுத்த கவச வாகனங்களாலும் அழிவுக்குள்ளாகி மிகவும் சீரழிந்த நிலையில் வாகனங்கள் செல்லமுடியாதவாறு காணப்படுகின்றது. இப்பாடசாலைக்குச் செல்லும் மாணவர்கள் பாழடைந்த வீதிகள் ஊடாகவும் அடர்ந்த காட்டுப் பாதைகளின் ஊடாகவும் துவிச்சக்கரவண்டிகளின்றி பல கிலோமீற்றர்கள் கால்நடையாகச் செல்வதைக் கண்ட பொழுது மனம் மிகவும் கனத்தது.





“துவிச்சக்கரவண்டிகளின்றிச் செல்லும் மாணவர்கள் பள்ளிக்குச் சென்று திரும்பும்வரை, நாங்கள் போன பிள்ளைக்கு என்ன நடக்குமோ என்று நெஞ்சிடித்தபடி காத்திருப்போம். அவர்கள் வந்த பின்பே எமக்கு உயிர் வந்த மாதிரி இருக்கும்” என்று ஒரு தாய் கூறினார். “இன்று நீங்கள் அன்பளிப்பு செய்த துவிசக்கரவண்டிகளால் எங்களது பெண்பிள்ளைகளின் பாதுகாப்பு ஓரளவேனும் உறுதிப்படுத்தபட்டுள்ளது. அவர்கள் பள்ளி முடிந்து விரைவாக வீடு வந்துசேர்ந்திடுவார்” என்று கண்ணீர் மல்கக் கூறி தங்களது பிள்ளைகளுக்கு செய்த இந்த உதவி போன்று ஏனைய மாணவர்களுக்கும் உதவி செய்தால் பயணத்தின் போது அவர்களின் பாதுகாப்பும் கல்வியும் மேம்படும் என்று கூறினார்.

A Better
DENTAL CARE
......for the whole family



we care for your
Smile

9796 2029
www.dentcare.com.au

Casey Professional Suites
Suite 3 / 6 - 8, Langmore Lane
Berwick
contact@dentcare.com.au

புத்தகப்பைகள் இல்லாது பொலித்தீன் பைகளில் தமது பாடப் புத்தகங்களைக் கொண்டு சென்ற பெருமளவிலான மாணவர்களில் சிலருடன் வீதிகளில் வாகனத்தை நிறுத்தி உரையாடினேன்.





பிற மாவட்டங்களில் அளவுக்கு மீறிய வசதி வாய்ப்புக்களால் மாணவர்களின் கல்வி மழுங்கிப் போகும் நிலையை நான் கண்டேன். ஆனால் வன்னிப் பிரதேசத்தில் பல சோகங்களுடன் வசதிகளற்ற நிலையிலும் மாணவர்கள் கல்வியில் ஆர்வமாக இருப்பது தெளிவாகப் புலப்பட்டது.

இம்முறை எம்மால் தெரிவு செய்யப்பட்டு அன்பளிப்புகள் வழங்கப்பட்ட அனைத்து பாடசாலைகளும் வழங்கப்பட்ட பொருட்கள் சம்பந்தமான விபரங்களும்.

| பாடசாலை | பொருட்கள் | எண்ணிக்கை | பெறுமதி ரூபா |
|---|---|---|---|
| மாங்குளம் புத்துவெட்டுவான் அ.த.க பாடசாலை | கற்றல் உபகரணங்கள்<br>சீருடைத் துணிகள் | 23 | 26,710 |
| மாங்குளம் மகா வித்தியாலயம் | துவிச்சக்கர வண்டிகள் | 5 | 71,000 |
| பாண்டியன்குளம் மகா வித்தியாலயம் | துவிச்சக்கர வண்டிகள்<br>கற்றல் உபகரணங்கள் | 2<br>20 | 39,400 |
| சிறாட்டிக்குளம் அ.த.க பாடசாலை | கற்றல் உபகரணங்கள் | 19 | 10,450 |
| கல்விளான்குளம் அ.த.க பாடசாலை | கற்றல் உபகரணங்கள் | 38 | 20,900 |
| உயிலங்குளம் அ.த.க பாடசாலை | கற்றல் உபகரணங்கள் | 25 | 13,750 |
| மன்னார் இரணைஇலுப்பங்குளம் அ.த.க பாடசாலை | கற்றல் உபகரணங்கள் | 380 | 18,905 |
| கிளிநொச்சி இந்துக் கல்லூரி | வினாத்தாள் கொத்துகள் | 176 | 58,416 |
| முள்ளிக்குளம் அ.த.க பாடசாலை | கணனி | 01 | 58,750 |
| மொத்த அன்பளிப்புத் தொகை | | | 318,281 |

வன்னியில் இன்னலுறும் இம்மாணவர்களுக்கு யாழ் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் சார்பாக இந்தச் சிறு உதவியைச் செய்ய முடிந்ததற்கு மகிழ்ச்சியாக இருக்கும் அதே சமயத்தில் இன்னும் தேவைகளை வேண்டிப் பல வன்னி இளம் மாணவர்கள் இருக்கிறார்கள் என்பதைப் புரிந்துகொண்டேன். நாங்கள் எல்லோரும் எம் இளம் சந்ததியினருக்கு மேலும் பல உதவிகளைச் செய்யவேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன்.

LMC | Landmark computers
com au
Quality | Service | Price | Advice

sales hot line
1300 133 165

BOX HILL
52-54 Rutland Rd
Ph: 9899 4424

City - CBD
332 Latrobe St
Ph: 9600 4424



Melbourne's Favourite IT Store
shop online 24/7
www.lmc.com.au

Dandenong
Shop 11,50 Princess Hway
Eumemmerring Ph: 9701 3366

Frankston
424 Nepean Hway
Ph: 9781 5655

## HP Pavilion Slimline S5390 Desktop

FREE 7" Digital Photo Frame





hp
hot Price!

Intel Core I5 | 4Gb RAM | 500Gb HDD
DVDRW | 15.6 HD-LED | Win 7 PM

Get FREE 7" Digital Photo Frame

## HP Pavilion Slimline S5390 Desktop

FREE 7" Digital Photo Frame

TV Tuner
Blu-Ray Drive



hp
hot Price!

Intel Core I5 | 4Gb RAM | 1Tb HDD
BLU-RAY | TV Tuner | Win 7 PM

Get FREE 7" Digital Photo Frame

hp
PhotoSmart
B109 Printer



TOSHIBA
2.5" 1Tb
Ext. HDD



SAMSUNG
22"
Bx2035
1600x900



## LMC DESKTOP PCs - The Brand You Trust and Depend Upon

### Predator Desktop



-Core i3-530
-GA-H55M-D2H
-Blu-Ray Combo
-4Gb, 500Gb
-20" SAMSUNG
-512 ATI Hd5550
-Win 7 PM

### Prestige Desktop



-Core i5-760
-ASUS P7P55-LX
-Blu-Ray Writer
-4Gb , 1TB HDD
-23" LG E2340 LED
-1Gb nV GTS450
-Win 7 PM

Authorised Reseller



### iMac Special

Select your iMac.

-Core i3/4Gb/500G
-DVDRW/21.5"
-MAC OS



### Macbook Pro Special

The fastest, most powerful

-2.4GHz/4Gb/250G
-DVDRW/13.3"
-MAC OS

# பெருங்குடற் புற்றுநோயும் (Colorectal Cancer)

“நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்”

இந்தப் பழமொழி எந்தளவுக்கு ஆழமான கருத்தைக் கொண்டுள்ளது என்பதை, நாமோ அல்லது எமது பிரியமானவர்களோ சுகவீனம் அடையும்போது தான் மிகத் தெளிவாகப் புரிந்து கொள்கின்றோம். சில நோய்கள் எமது வாழ்க்கையை அப்படியே புரட்டிப் போட்டுவிடுகின்றன. இவற்றில் மிக முக்கியமானவை புற்றுநோய்கள். அவுஸ்திரேலியாவில் மிக அதிகமாக உயிரைக் காவுகொள்ளும் புற்றுநோய்களில் இரண்டாவது பெருங்குடற் புற்றுநோய்.

**பெருங்குடற் புற்றுநோயின் முக்கியமான தரவுகள்;**

Bowel Cancer Australia வின் புள்ளிவிபரங்களின் அடிப்படையில்

- மனிதர்களில் 12:1 விகிதமானோருக்கு தமது வாழ்நாளில் இந்நோய் ஏற்படுவதற்கான வாய்ப்புகள் காணப்படுகின்றன.
- அவுஸ்திரேலியாவில் வருடமொன்றுக்கு ஏறத்தாழ பதினையாயிரத்திற்கும் அதிகமானோரில் இந்நோய் கண்டறியப்படுகின்றது.
- ஆரம்ப காலத்தில் கண்டறியப்படும்போது தொண்ணூறு வீதமான பெருங்குடற் புற்றுநோயாளிகளை முற்றிலும் குணப்படுத்த முடியும்.
- ஆரம்ப கால அறிகுறிகள் மூலமாக நாற்பது வீதமான பெருங்குடற் புற்றுநோயாளிகள் கண்டறியப்படுகின்றனர்.

**பெருங்குடற் புற்றுநோய் (Colorectal Cancer) என்றால் என்ன?**



பெருங்குடல் மற்றும் குதம் ஆகிய பகுதிகளில் ஏற்படுகின்ற புற்றுநோயே பெருங்குடற் புற்றுநோயாகும். ஆரம்ப காலத்தில் கண்டறியப்படும்போது இலகுவாக குணப்படுத்தக் கூடியதாகவும் தவறுமிடத்து இப்புற்றுநோயானது உடலின் மற்றைய பகுதிகளுக்குக் குறிப்பாக ஈரல், நுரையீரல் போன்றவற்றிற்குப் பரவக்கூடியதாக இருப்பதுடன் குணப்படுத்துவதற்குக் கடினமானதாகக் காணப்படுகிறது.

**பெருங்குடற் புற்றுநோயின் அறிகுறிகள்**

- மலங்கழித்தலில் ஏற்படக்கூடிய மாற்றங்கள், பொதுவாக மலச்சிக்கல் மற்றும் அதனைத் தொடர்ந்த வயிற்றோட்டம்
- மலங்கழிக்கும் போது மலத்துடன் இரத்தம் வெளியேறுதல் (வேறு காரணங்களாலும் மலத்துடன் இரத்தப் போக்குக் காணப்படலாம்)
- வயிற்று நோ
- வயிற்றில் கட்டி (Mass)
- காரணமற்ற குருதிச்சோகை (Anemia)
- திடீரென உடற்பருமன் குறைவடைதல்

# Bayswater

**140 Canterbury Road, Bayswater**
**Phone 03 9761 5000**

www.bayswaterjayco.com.au

Jayco
that's freedom

## Caravans

2015 SILVERLINE AND STARCRAFT

*The Jayco team at Bayswater Jayco has satisfied the needs of caravan owners for over 35 years!*










40 YEARS

*Bayswater Jayco are "committed to service which exceeds our clients' expectations. We listen and we work with you.*

மேலே குறிப்பிட்ட அறிகுறிகள் குடலில் ஏற்படக்கூடிய வேறு நோய்களாலும் ஏற்படலாம். எனவே இவ்வாறான அறிகுறிகள் காணப்படும் ஒருவர் தனது வைத்தியரின் ஆலோசனையை உடனடியாகப் பெறுவது நல்லது.

**நோயினைக் கண்டறியும் முறைகள்**

முன்னரே குறிப்பிட்டது போல, ஆரம்ப காலத்தில் இந்நோயினைக் கண்டறியும்போது அதற்குரிய சிகிச்சை முறைகள் மிகவும் பலனுள்ளவை. இதனால்தான் அவுஸ்திரேலியாவில் மிகவும் இலகுவான மாதிரிப் பரிசோதனை நடைமுறையிலுள்ளது.

- Fecal Immunochemical Test (FIT)

இந்த மாதிரிப் பரிசோதனையில் மூன்று தொடர்ச்சியான வெவ்வேறு நேரங்களில் பெறப்படும் மலத்தின் மாதிரிப் பரிசோதனைக்கு உட்படுத்தப்படுகின்றது. அவுஸ்திரேலியாவில் ஐம்பது வயதை அடைந்த ஒவ்வொருவருக்கும் Bowel Cancer Australia, தபால் மூலம் இந்த பரிசோதனைக்கான உபகரணங்களை அனுப்புகின்றது. ஒருவர் இதனைச் செய்யத் தவறும்பட்சத்தில் அவர் தனது குடும்ப வைத்தியர் மூலமாகவும் இந்த மாதிரிப் பரிசோதனையைச் செய்யலாம்.

ஐம்பது வயது தொடக்கம் எழுபத்து நான்கு வயது வரையான ஒவ்வொருவரும் இரண்டு வருடங்களுக்கு ஒரு முறையாவது இந்தப் பரிசோதனையைச் செய்வது மிகவும் நல்லது.

இந்தப் பரிசோதனையில் புற்றுநோய்க்கான அறிகுறிகள் (Positive Results) வரும்போது அவர்கள் மேலதிக பரிசோதனையான Colonoscopy Testற்கு உட்படுத்தப்படுகிறார்கள். (Positive Results எப்போதும் பெருங்குடற் புற்றுநோயினைக் குறிக்காது).

புற்றுநோய்க்கான அறிகுறிகள் தென்படாத நிலையில் (Negative Results) அவர்கள் அடுத்த இரண்டு வருட முடிவில் இந்தப் பரிசோதனையை மீண்டும் செய்தல் வேண்டும். இந்தக் காலப்பகுதியில் குருதியிழப்பு இருப்பின் வைத்தியரை நாடவேண்டும்.

- Colonoscopy

இந்தப் பரிசோதனை மேலே குறிப்பிட்ட FIT Positive Results உடைய ஒருவருக்கோ, பரம்பரையில் பெருங்குடற் புற்றுநோய் உள்ள ஒருவருக்கோ செய்யப்படுகின்றது. ஒருவரின் குதத்தினூடாக ஒரு புகைப்படக்கருவி (Camera) பொருத்திய குழாயைச் செலுத்தி பெருங்குடலின் முழுப்பகுதியையும் பார்வையிடுவதுடன் அவற்றில் காணப்படும் கட்டிகள் மற்றும் புண்களில் இருந்து மாதிரிகளை (Biopsy) எடுத்து பரிசோதனை செய்வதே இந்தப் பரிசோதனையின் நோக்கமாகும். இந்தப் பரிசோதனையானது ஒருவரது மயக்கநிலையில் செய்வதனால், மிகவும் இலகுவானது.

**எவ்வாறு இதனைக் கட்டுப்படுத்தலாம்?**

வயது மற்றும் பரம்பரை அலகு (Genetic Predisposition) ஆகிய காரணிகளால் எம்மால் மாற்றத்தினை ஏற்படுத்தமுடியாவிட்டாலும் புற்றுநோய் உண்டாவதை மேலும் தூண்டும் காரணிகளைக் கட்டுப்படுத்துவதன் மூலம் இந்நோய் ஏற்படுவதைத் தடுக்கலாம்.

# WARAN
# &
# ASSOCIATES
*Lawyers*

# *With Compliments*


*DUSHYANTHI RAJESWARAN*
*Legal Practitioner*
*&*
*Migration Agent Registration No: 68121*

*1 Settler Court, Glen Waverley, Victoria 3150*
*Tel: 03 9560 3711 Fax: 03 9560 3722*
*Mobile: 041 350 7022*
*Email: dwaran@optusnet.com.au*

உணவு மற்றும் வாழ்க்கை முறைகள் (Lifestyle) பெருங்குடற் புற்றுநோயினைக் கட்டுப்படுத்த கூடிய காரணிகளாகக் காணப்படுகின்றன.

- ✶ புகைப்பிடித்தலை நிறுத்துதல்
- ✶ கட்டுப்பாடான மதுபானப் பாவனை
- ✶ உடற்பருமனைக் கட்டுப்படுத்துதல் (Healthy Weight)
- ✶ நாளாந்தம் முப்பது நிமிடங்களுக்குக் குறையாத உடற்பயிற்சி
- ✶ மட்டுப்படுத்தப்பட்ட மாமிசப் (Red Meat) போசனை
- ✶ அதிகளவிலான தானியங்கள், மரக்கறிகள், நார்த்தன்மை உள்ள உணவுகளை அன்றாட உணவில் உட்கொள்ளுதல் (Balance Diet)



**நோய்க்குரிய சிகிச்சை முறைகள்**

பொதுவாக இந்த நோய் கண்டறியப்பட்ட ஒருவர் சிறப்பு நிபுணத்துவம் பெற்ற மருத்துவரினால் சிகிச்சை அளிக்கப்படுகிறார். பெருங்குடற் புற்றுநோய்க்கு சத்திர சிகிச்சை, கதிர்வீச்சு சிகிச்சை (Radiatio Therapy) மற்றும் மருந்து ஏற்றுதல் (Chemo Therapy) போன்ற பல்வேறுபட்ட சிகிச்சை முறைகள் காணப்படுகின்றன. அவற்றைப் பற்றிய மேலதிக விபரங்கள் எமக்குப் பொருத்தமற்றவையாக அமையலாம்.

(**குறிப்பு:** என்னைப் பொறுத்தவரையில் இந்தப் புற்றுநோய் சம்பந்தமான ஒரு விழிப்புணர்வை உங்களிடையே எடுத்துவருவதன் மூலம் அதனைக் கட்டுப்படுத்துவதே பிரதான நோக்கமாகும். நீங்கள் இது சம்பந்தமான மேலதிக விபரங்களை உங்கள் குடும்ப வைத்தியர் மூலம் பெற்றுக்கொள்ளலாம்.)

**Dr. V.M. பிரதீபன் –** [உயர் தரம் 1995] - யாழ் இந்துக் கல்லூரி

**நன்றி:**

- Cancer Australia
- Better Health
- Royal Australian College of General Practitioner

# REMARKABLE QUALITY AND RELISHING TASTE.




# SAI SHREE FOODS PTY. LTD.

**If you're after the authentic taste of Indian style foods look no further, Sai Shree Foods is the manufacturer of quality Indian Yoghurt, Idli & Dosa mix, Paneer, Shrikhand Kesar Elaichi, Mango Lassi, Punjabi Lassi and much much more. Sai Shree Foods produce a Quality Australian Product from three factories in Melbourne, Sydney & Adelaide.**

**Sai Shree International Pty. Ltd. • 3/9-13, Dingley Avenue, Dandenong, Vic 3175. • Mr. Venkat - 0423 470 969 - 03 9769 2645**
**3 Woodside Avenue, Blacktown, NSW 2148. • Mr. Venkat - 0423 470 969 • Mr. Bhaskar - 0421 835 554**
**Adelaide • Mr. Arvind - 0404 860 091**

Sai_Shree_Foods_FP_Ad_240x345mm_v5.indd 1 8/08/12 8:48 PM




cranbourne HOLDEN


HOLDEN GRAND MASTERS 2015

**217A SOUTH GIPPSLAND HWY PHONE: 1800 653 723**

**www.cranbourneholden.com.au**

LMCT 11152


Deep & Meaningful Events
Contact us on 0432 086 102
Or Find us on Facebook
www.facebook.com/deepandmeaningfulevents


VALIDEK ENTERPRISES PTY LTD
Business Means Quality & On Time
Custom Plastic Moulding,
with quality workmanship
and prompt deliveries
Director : Nadarajah Shatheeshkumaran
13 Century Drive, Braeside VIC3195; Ph: (03) 9580 1542;Fax: (03) 9580 1543

# A Young Achiever



In the G.C.E A/L examination held in 2015, Anantharajah Harishankar from the Bio stream obtained 3A's and was ranked first in the Jaffna district. He shared his success story with us.

**About his accomplishment. . .**

I am very happy about my success in advance level exam 2015. I chose the subjects in Bio stream as I love Science a lot. I studied with the hope of not only entering into medical field but also achieving something special.

**The challenges faced for this achievement. . .**

Nothing was easy. To achieve something special you need to sacrifice a lot. Studying in Bio stream is not easy. You need to face highly competitive exam to make your dream come true. Hence a lot of hard work is expected from everyone. I loved participating in extracurricular activities, but I couldn't take part in those activities at all times. Though I got opportunities to express my talent, I decided to sacrifice them to achieve my dream. Moreover, I lost many happy moments as I was fully concentrating on my studies.

**The steps towards the success. . .**

First, set your target; be determined; work hard for it; identify the true ways of studying that can suit you; have a good rest; be relax and don't panic; keep your nerves calm, and prepare yourself with the help of past papers, then success is yours!

**Jaffna Hindu's contribution in this journey. . .**

My school provided me an excellent opportunity to learn. It gave me a very competitive environment to thrive and grow stronger. Teachers appreciated and encouraged me a lot since my early grades which triggered me to study hard. My school gave me a lot of platforms including international opportunities to strengthen my vision. Irrespective of their teaching subjects, all teachers contributed to me in many ways.




**DISPLAY CENTRES OPEN**

Monday-Wednesday 12pm-5pm, Saturday-Sunday 11am-5pm, *Open 7 Days

- **ARMSTRONG CREEK** Maroubra Street, (Warralily Estate) - Opening November 2016
- **ARMSTRONG CREEK** Coastside Drive, (Warralily Estate)
- **CRANBOURNE NORTH** Lucinda Lane, (Tulliallan Estate)
- **GREENVALE** Destination Drive, (Aspect Estate)
- **ROCKBANK*** Woodlea Boulevard, (Woodlea Estate)
- **SUNBURY** Rosenthal Boulevard, (Rosenthal Estate)
- **TARNEIT** Leakes Road, (Heartlands Estate) - Opening January 2017
- **WERRIBEE*** Billeroy Way, (Harpley Estate)

#All images are for illustrative purposes only. Sherridon reserves the right to amend specifications and price without notice. Copyright Sherridon 08.09.16

For more information about our home designs or to discuss your build needs, call **Gaurav Bhanot** on **0404 593 910** or visit us at **www.sherridonhomes.com.au**

SHERRIDON
'building made easy'

**From your experience to other students in this stream. . .**

As I mentioned earlier, set your target. You should study Bio stream if you feel that you are safe and comfortable. Once stepped into this field, be dedicated and serious. Don't play pranks at school or anywhere you study. Respect your teachers, which is important than anything else. When you show that you are dedicated, teachers will always care for you. Believe in God, because there is something beyond our control.

**Family's backing in the success story. . .**

It was a family dream. The support from my parents, grandparents, brother and sister was key to my success. They are always there for me and comforted when I felt down.

**Learning from the trip to Tokyo. . .**

I took this scholarship as a great opportunity to enhance my science knowledge. However, this trip was worth more than what I anticipated.

There were 10 students from Sri Lanka who performed well at the National level. We were from a developing country. Most of the scientific advancements in Japan were very new to us!!! SHINKAI 6500 and Ashimo made us speechless. Awesome experience!

We got new ideas from all lectures that we attended. We met noble laureates, scientists, and astronomers from Japan. The experience was very encouraging and informative. The lecturers fed us with many scientific ideas and guidance to reach success in our life.

More than that we got a good understanding of Japanese culture and tradition. Japanese are very effective and polite people. Their punctuality even among their tiresome life inspired us. This tour gave us a lot of entertainment, information and friends. I enjoyed it very much.

**In the future heading to. . .**

I want to be a surgeon, more than that I want to be a scientist. I'll work hard in the future to quench my thirst. I want to contribute something new to the specific field I choose that will enhance the human life. I don't know how far this is possible, but I'll work hard for it.

I'll never forget my school, and I will always help my school whatever way I can.

*with the best complements from*

# RAJ KAMAL
## ENTERPRISE PTY LTD




**SELLING**

**INDIAN**

**SRI LANKAN**

**ISLANDERS**

Rajah
Tel: 03 9077 7945
Mob: 0478 106 994

**RAJ KAMAL ENTERPRISE PTY LTD**
22 Station Street, Moorabbin, VIC 3189

# யாழ் மாணவர்கள் இன்று எதிர்நோக்கும் கற்கைசாரா சவால்கள்

வடக்கு கிழக்கு மாகாண மாணவர்கள் காலங்காலமாக பல்வேறு சவால்களைத் தமது கற்கைக் காலத்தில் எதிர்நோக்கியமை வரலாறு. ஆயினும் திறமைகளை நிரூபிப்பதில் எந்தவொரு காலத்திலும் அவர்கள் பின்தங்கியதில்லை. குறிப்பாக யாழ் மாவட்டம், இலங்கையில் கல்வித்துறையில் மிகவும் உயர்ந்த நிலையில் பெருமதிப்புடன் விளங்கியது. மிகவும் இக்கட்டான காலங்களிலும் இவ்வாறான சாதனைகளை எம் மாணவர்கள் சாதித்தனர். ஆனால் இன்று கற்றல்சார்ந்த சவால்கள் ஒப்பீட்டளவில் குறைவாக இருந்தாலும் அவர்கள் எதிர்நோக்கும் கற்கைசாராப் பிரச்சனைகள் நாள்தோறும் செய்தியாக இருப்பது மிகவும் வருத்தத்திற்குரியதே. மாணவர்களின் பெறுபேற்று முடிவுகளில் இன்று தொடர்ச்சியான வீழ்ச்சி நிலையே காணப்படுகிறது. எமது கல்விக்கு என்ன நடந்தது? அதே பாடசாலைகள், தரமான ஆசிரியர்களும், தனியார் வகுப்புகளும் இருந்தும் கல்வித் தரம் மட்டும் ஏன் சரிகின்றது? ஏன் இன்று இவ்வாறான நிலைமை என்பது பற்றியும் எவ்வாறு இதிலிருந்து மீண்டெழுவது என்பது பற்றியும் சிந்திப்பதும் அதற்கான செயற்பாடுகளில் இறங்குவதும் இன்று மிகவும் அவசியமாகின்றது.

முன்னர் இல்லாதவாறு மாணவர்கள் கல்வியில் நாட்டம் குறைந்த நிலை காணப்படுவதற்கு மதுபானம், போதைப்பொருள் பாவனை, புகைத்தல் மற்றும் விபச்சாரம் என பல கவனக்கலைப்பான்கள் மாணவர்கள் மத்தியில் பரவலாக தாக்கம் செலுத்துகின்றன. அண்மைக் காலங்களில் இடம்பெற்ற சில சமூகவிரோத செயற்பாடுகள், குழுச்சண்டைகள் மற்றும் போதைப்பொருள் வியாபாரம் என்பவற்றில் பல திறமையான மாணவர்கள் சம்பந்தப்பட்டமை தெரியவருகின்றது. இதற்கு மதுபானம், போதைப்பொருட்கள் என்பன மாணவர்களுக்குத் தாராளமாக கிடைக்கின்றமையோ அல்லது அவற்றின் பாவனைக்கு மாணவர்கள் திட்டமிட்டமுறையில் இலக்காக்கப்படுகின்றமையோ காரணமெனச் சந்தேகம் எழுகின்றது. இவை எவ்வாறு நடைபெற்றது அல்லது நடைபெறுகின்றது என்பதைக் கவனமாக ஆராய்ந்து தடுக்க நடவடிக்கை எடுக்கவேண்டியது அவசியமாகும்.

வளரும் மாணவர்கள் எப்போதும் தேடல் உடையவர்கள். புதிய விடயங்களை இலகுவாக உள்நுழைத்துக் கொள்பவர்கள். இன்றைய நவீன யுகத்தின் வளர்ச்சியாக தொலைபேசி, இணையம் மற்றும் சினிமாவும் அவர்களிடையே மிகுந்த ஆதிக்கம் செலுத்துகின்றது. பொதுவாக வளர்ச்சிபெறும் தொழில்நுட்பங்கள் மனிதவள விருத்திக்குச் சாதகமானாலும் அவற்றின் தவறான உபயோகம் கேடாகவும் அமையலாம். மிகையானதும் பயனற்றதுமான பாவனையால் செலவுகள் அதிகரிப்பதோடு பெறுமதியான நேரங்கள் விரையமாகின்றது. சினிமாக்களில் வரும் வீரத்தனமும் வில்லத்தனமும் நடைமுறை வாழ்க்கைக்கு அப்பாற்பட்டதே. ஆயினும் இளைஞர்களின் அதீத சினிமா வெறியானது அவற்றைத் தாமும் செய்யத் துணிந்து குழப்பங்களையும் பிணக்குகளையும் தோற்றுவிப்பதுடன் தரக்குறைவான அல்லது வரம்பு மீறிய செயற்பாடுகளுக்கு அவர்களை இட்டுச் செல்கின்றது.

மாணவர்கள் சமூகவிரோத செயல்களில் ஈடுபடும்போது அதனை எவ்வாறு பெற்றோர்கள் அறிந்திராமல் இருப்பதென்பது கவனிக்கப்பட வேண்டிய விடயம். குழுச்சண்டை, மது மற்றும் போதைப்பாவனை என்பன அதிகரிக்க கவனிப்பும் கண்டிப்பும் குறைவடைந்தமையே காரணம். பாடசாலைக்கு அல்லது தனியார் வகுப்புகளுக்குச் செல்லும் மாணவர்கள் என்ன செய்கின்றனர் என்பதைப் பெற்றோர்கள் எப்போதும் அறிந்திருக்க வேண்டியது அவர்களின் கடமையாகும். பெற்றோரற்ற மாணவர்களை சமுதாயம் அன்போடும் பரிவோடும் சிறுபராயத்திலிருந்து வழிநடாத்திச் செல்லும் வகைகளை ஆராய்ந்து செயற்படுதலும் இன்றியமையாதது.

பிள்ளைகளுக்கு வழங்கப்படும் அன்பளிப்புகள், பணத்தொகைகள் அதிகமாகக் கிடைப்பதோடு கண்காணிப்பும் குறைவான நிலைமையும் மாணவர்களின் சீர்கேடுகளுக்கு வழிவகுக்கும். அண்மைய காலங்களில்

# ALAGES TAXI SERVICE

## ONE OF THE LEADING TAXI SERVICES IN

## MELBOURNE’S SOUTH EAST REGION.

**We are here for all your trasportaion needs.New Taxies and Best Drivers.**







**Please call Alages on 0416 037 985**

**Advance booking are much appreciated**

வீதிவிபத்திற்கு உள்ளாகும் அல்லது மரணமாகும் மாணவர்களின் எண்ணிக்கை அதிகமாகக் காணப்படுகின்றது. விலையுயர்ந்த தொலைபேசிகள் மற்றும் அதிதிறன் வாய்ந்த மோட்டார் சைக்கிள்களின் பாவனை மிகவும் அதிகரித்தமை, வீதிஒழுங்கு கடைப்பிடியாமை, வீதிஒழுங்கு அமுல்படுத்தலில் உள்ள குறைபாடுகள் என்பவே இதற்கு முக்கிய காரணங்களாகும்.

உறவினர்களுக்கு உதவிபுரிதல், பகிர்ந்தளித்தல், தானம் போன்ற பண்புகளில் எம்மவர்கள் சிறந்தவர்களே ஆயினும் வெளிநாடுகளில் இருந்து பலவழிகளில் உதவுவோர், தேவைகளின் அத்தியாவசியத்தை ஆழமாக ஆராய்ந்து தமது உதவிகளைச் செய்வதன் மூலம் இன்றைய இளைய சமூகத்தினர்க்கு பணம் மற்றும் வளங்களின் அருமையை எடுத்துச் சொல்ல முடிவதுடன் கடின உழைப்பின் பெருமை பற்றியும் அவர்களுக்கு அறிவுறுத்தமுடியும்.

மேலும் வேலைவாய்ப்பு, மேற்படிப்பு முதலிய காரணங்களால் வெளிநாடு செல்லும் போக்கு மக்களிடையே பரவியிருப்பதனால் மாணவர்கள் பாடசாலைக் கல்வியில் காட்டும் நாட்டம் குறைந்திருக்கின்றதெனலாம். இது தமது இளமைக் கல்வியை தாமே சீரழிப்பதாகவே அமைகின்றது.

கல்வி வீழ்ச்சிக்கு பெற்றோரைத் தவிர பாடசாலைச் சமூகமும் பொறுப்புக் கூற வேண்டியவர்களாக இருக்கிறார்கள். இன்று ஆசிரியர்கள் மாணவர்களை வார்த்தைகளால் கூட கண்டிக்க முடியாத நிலையே காணப்படுகின்றது.

முடிவாக இன்றைய மாணவர்களின் பிரச்சனைகளை வெறுமனே செய்திகளாகப் பார்க்காமல் அதற்கான செயல்வடிவங்களை வழங்க வேண்டியது சமூகத்தின் கடமையாகும். இதன் முதற்படியைப் பெற்றோரே ஏற்கவேண்டியுள்ளது. தமது பிள்ளைகளின் எல்லாவித நடவடிக்கைகளிலும் அக்கறைகொண்டு அவர்களது கல்விசாராச் செயற்பாடுகளையும் கண்காணிப்பது அவசியம்.

அத்தோடு சமூக நிறுவனங்கள் கல்விக் கழகங்கள் மாணவர்களது பிரச்சனைகளை ஆராய்ந்து புதிய வழிவகைகளைக் கையாள்வதன் மூலம் நல்ல முடிவுகளை அடையலாம். மாணவ ஆலோசனைகள், மனநல ஆலோசனைகள், யோகா மற்றும் உடற்பயிற்சிகளும் இதற்கு உதவக்கூடும். பாடவிதானங்களில் சமூக விழுமியங்கள் பற்றிய விடயங்களின் உள்ளடக்கம், விழிப்புணர்வுச் செயற்திட்டங்கள் மற்றும் தொடர் கலந்துரையாடல்கள் சிறந்த முடிவுகளுக்கு வழிவகுக்கும். பெற்றோருடன் பாடசாலையும் பல வழிகளில் உதவுவது சிறப்பாகும்.

எல்லாவற்றிற்கும் மேலாக நீதித்துறையின் துணையோடு சமூக செயற்பாட்டாளர்களும் காவல்துறையும் முழுமையான அர்ப்பணிப்புடன் சமூக சீர்கேடுகள் மற்றும் கல்விக் கவனக் கலைப்பான்களை இனங்கண்டு மாணவர்கள் கல்வியை இடையூறின்றித் தொடரப் பூரணமாக உதவவேண்டும். மாணவர்களின் பிரச்சனைகள் பூதாகரமாகுமுன் அதனைத் தீர்ப்பதற்கான புதிய செயல்வடிவங்களைப் பெற்றோர், பாடசலைச் சமூகம் மற்றும் அரசு உட்பட அனைவரும் சரியாகச் செயற்படுத்துவதே இன்றைய காலத்தின் தேவையாகும்.

**Dr. இரத்தினசிங்கம் கோபித் –** [உயர் தரம் 1995], யாழ் இந்துக் கல்லூரி

With Compliments From...

Taste of
# PARADISE PIZZA
Best Pizza On Earth

حلال
HALAL




## NOW OPEN FOR FAMILY DINING

### PRAYER FACILITIES AVAILABLE

## 9793 9888

8 CLOW ST, DANDENONG (OPPOSITE. KFC)




# A FREE ANZ HOT SHOT T-shirt.

## TOP HIT TENNIS COACHING

| Mayfield Park Tennis Club | St.Judes Tennis Club (Scoresby) |
|---|---|
| North Oakleigh Tennis Club | Glen Waverley Tennis Club |

- Group Lessons (no more than 4 on court)
- Semi-Private Lessons (2 on court)
- Private Lessons (one on one)
- All Ages Welcome.
- Competition Teams Available
- Junior Hot Shot Tennis : softer balls, lower nets, makes learning more fun.
- Cardio Tennis & Mum's program.

**0417 327 880**

**TCAV CLUB PROFESSIONAL**

CONTACT: Brad Hasler on 0417 327 880 or brad_hasler@yahoo.com.au

Harcourts Judd White

FOR ALL YOUR REALESTATE NEEDS CALL US ANYTIME!!

LOU PAOLA 0409 319 643

DEXTER PRACK 0419 331511

**SPECIALIST IN RESIDENTIAL SALES AND PROPERTY MANAGEMENT**

Tel: 9518 7000

173 Coleman Parade, Glen Waverley

www.juddwhite.harcourts.com.au



# யாழ் இந்துவில் சாரணியம்




சிவானந்தன் செவ்வேள்
[1991] - யாழ் இந்துக் கல்லூரி

# CRESCENT SEA RESORT









- # Luxury deluxe double rooms
- # Located 200 meters away from Nilaveli beach
- # Standard package includes breakfast
- # Bring this advert to claim your 10% off at the check-in desk










Ward No-3
Gopalapuram,
Nilaveli, Trincomalee,
Sri Lanka

Sri Lanka +94 26 223 2666
+94 26 320 0340
+94 71 915 2820
North America +1 647 955 0277
info@crescentsearesort.com

# மறந்துவிட முடிவதில்லை...

புலம்பெயர்ந்து வந்தாலும் புலனெல்லாம் பிறந்த மண்ணில்
நலங்கள் பல இங்கிருந்தும் நம்மனமோ வெறுமைநிலை
உளம் மகிழ வாழவெண்ணி உழைக்கின்றோம் ஓய்தலின்றி
உளமகிழ்வோ சிலநேரம் உளநெகிழ்வோ பலநேரம்
மனம் முழுக்க ஊரையெண்ணி மௌனித்தே நிற்கிறதே!

நீர் கண்ட இடமெல்லாம் நீந்தி நாம் களித்திருந்தோம்
யாரென்ன கொடுத்தாலும் நாம் விரும்பி அதையுண்டோம்
தார்ரோட்டில் ஓடிநின்றோம் தலைநிறைய எண்ணெய் வைத்தோம்
கார்ப் பயணம் இல்லாமல் கால்நடையாய் சென்று வந்தோம்!

ஓடி நிற்போம் பாடி நிற்போம் உடல் முழுக்க வியர்வை வரும்
ஒடியல்கூழ் குடித்துவிடின் உற்சாகம் தேடிவரும்
பனங்கிழங்கு பனாட்டு பனங்குட்டான் பால்றொட்டி
பாங்காக சுவைத்தபடி பந்தாடி மகிழ்ந்து நிற்போம்!

எங்களது கல்லூரி அருகிலுள்ள கடையதனில்
இடியப்பம் இடிசம்பல் இருப்பதுவோ சிலநாளே
தங்கராசு அண்ணனது தாராள மனத்தாலே
எங்களுக்கோ இடியப்பம் எப்படியோ கிடைத்துவிடும்!

பாடசாலை விடுமுறையில் பல நண்பர் சேர்ந்தபடி
கீரிமலைக் கேணி நோக்கி கிளம்பிடுவோம் சைக்கிளிலே
கேணியிலும் குளித்திடுவோம் கிட்டவுள்ள கடலிலும்
ஆசை தீர நீச்சலிட்டு அனைவருமே மகிழ்ந்து நிற்போம்!

சித்திரையில் பட்டங்கட்டி திரளாகப் பறக்கவிட்டு
சத்தமிட்டுக் கூத்தாடி சகலருமே நின்றிடுவோம்
வட்டமிடும் பட்டமெலாம் வாவெனவே அழைக்குதென
வண்ணக் கருவிழியால் வானத்தைப் பார்த்து நிற்போம்!

*with the best complements from*

# ARC Conveyancing Services

Member of the AIC - VIC Division

- Prompt professional service
- Purchase & Sale transactions
- Change of Ownership
- Subdivisions
- Covenant Changes
- Rectification of Title errors
- FIRB approvals
- Self-Managed Super Funds transactions
- Holds indemnity insurance
- No Hidden costs

*Please contact for further details*

**Angela Pisano**
Principal Conveyancer
Associate member of the Institute of Legal Executives
A person holding a full Licence under the Conveyancers Act 2006 Licence No- 000230L

ARC Conveyancing Services
PO Box 1189 Robinson, VIC 3019
T: 1300 690 722 F: 1300 690 755 M: 0408 341 961
E: arc@arcconveyancing.com.au

போரென்னும் பெயராலே ஊரெல்லாம் ஓடியது
ஊரிலுள்ள மக்களெலாம் உருக்குலைந்தும் போனார்கள்
ஊரைவிட்டு பேரைவிட்டு உற்றாரை இழந்துவிட்டு
யாருறவும் இல்லாத நாட்டிலிப்போ வசிக்கின்றோம்!

எங்களது உழைக்கும் சக்தி எந்நாட்டில் இருந்தாலும்
மங்காமல் இருப்பதனால் வாழுகிறோம் வீழாமல்
பொங்கிவரும் தமிழுணர்வால் எங்கள் தமிழ் வளர்க்கின்றோம்
என்றாலும் தமிழ் பற்றி இன்னுமே எண்ணல் வேண்டும்!

ஊரிலே வாழ்ந்த அந்த உவப்பில்லா காலமதை
உள்ளமது நினைக்கையிலே ஒரு வெறுமை தெரிகிறது
வசதியுடன் வாழ்ந்தாலும் வசந்த காலம் மனம்முழுக்க
வாழ்ந்துகொண்டே இருப்பதனை மறந்துவிட முடிவதில்லை. . .

**எம் . ஜெயராமசர்மா** – [1965 – 1969] - யாழ் இந்துக் கல்லூரி

* * * * *







# RICH MAHAL

## BYO

### Restaurant

### & Asian Groceries





- Sri Lankan
- Indian
- Malaysian
- Tandoori
- Vegetarian



Every Tuesday
Hopper Night



# 9887 7663

www.richmahal.com.au

We cater for all functions
All enquires: 0416 115 123

| Vermont South | Asian Grocery | Narre Warren |
|---|---|---|
| Shop 3 .499<br>Burwood Hwy<br><br>**OPEN**<br>7 Days<br>Lunch & Dinner<br>11.00am to 10.00 pm | Open<br>7 Days<br>10.30am<br>to 9.00pm | Shop 2/2-8,<br>Victor Crescent<br>Narre Warren<br><br>**OPEN**<br>6 Days<br>11.00am to 10.00 pm<br>Monday- Saturday<br>Ph:9705 9366 |

TGVK

STRUCTURAL AND CIVIL ENGINEERING CONSULTANCY

Innovative Immaculate Ingenious

# Professional Building Design & Architectural Services

**Town Planning Drawings & Documents**

**Architectural Working Drawings & Documents**

**Building Permit Documents**

**Builder Engagements**

**Owners Watch Dog During Construction**

**One Stop Professional Consultants for all Your Property Development Needs**

## Contact the Highly Qualified Industry Experts

**Please Contact**

**Kana Thiru on 0432 350 584**

**9590 0606 for an Appointment**

Building Designers

Architectural Services

Town Planning Services

Building Permit Documents

Structural & Civil Engineering

Builder Engagements

Quality Assurance Inspections

**Please Contact:**

**Dr. Kana Thiru**

Ph D, B.Sc, RBP, CP Eng, MIE Aust, NER, MCIA, MACI

Director & Principal

Mobile: 0432 350 584

Phone: (03) 9590 0606

Email: thiruk@tgvk.com.au

Web: www.tgvk.com.au

Suite 24, Level 3

799 Springvale Road

Mulgrave, Vic. 3170

VANTEC
CARAVAN PROTECTION

# PROTECT YOUR NEW INVESTMENT

EXTERIOR PAINT SEALANTS
• Stops fading & chalking
INTERIOR FABRIC PROTECTION
• Easier to clean spills & red dust

## FULL CARAVAN PROTECTION



FOR FURTHER INFORMATION VISIT:
WWW.VANTEC.COM.AU

1300 133 830 OR 03 9761 5552
VANTEC CARAVAN PROTECTION
140 CANTERBURY ROAD, BAYSWATER VIC 3153

# WATER TOUCH CAR WASH CAFE

Our credibility comes from proudly servicing the neighbouring car dealerships including Audi Doncaster, Silverstone Volvo, Volkswagen Doncaster, Mercedes Benz Doncaster, Eastern Honda, Subaru Doncaster and many more.

## OUR SERVICES

- FULL CAR DETAILING
- HAND CAR WASHING
- WINDOW TINTING
- PAINT PROTECTION
- INTERIOR PROTECTION

## BRING BACK THAT NEW CAR FEELING



TRADING HOURS: MONDAY – SATURDAY 8.00 – 5.30PM

## ONE STOP CAR DETAILING & HAND CAR WASHING ......

☎ 03 9840 7999

0431 290 834

WATER TOUCH CAR WASH CAFE
566 DONCASTER ROAD
DONCASTER, VIC 3108

# MANAGEMENT COMMITTEE 2016 - JHC OBA Victoria, Australia



Standing from left: N.Prabaharan, T.Athavan, S.Sriskanthabalan, P.Prabakaran, A.Thevakumar, T.Athiththan, K.Vijayarajan, S.Saththiyan
Sitting from left: S.Thavendran, T.Satheeshkumar, A.Noyel, K.Sathiyalingam, S.Sivananthan, C.Srinanthakumar, T.Sriharan
Absent: K.Sivasuthan, S.Vijekumaran, K.Arunagirinathan, G.Partheepan, T.Aathavan

# பண்டிதர் க.செல்லத்துரை, B.A (Lon)

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் மாணவனாக இருந்த காலப்பகுதியில் பல சிறந்த ஆசிரியர்களிடம் கல்வி பயிலும் வாய்ப்பு எனக்கு கிடைத்தது. கற்பித்தலில் மட்டும் திறமை உடையவர்களாக அன்றி மாணவர்களுக்கு ஒரு வழிகாட்டியாகவும் முன் உதாரணமாகவும் திகழ்ந்த ஆசிரியர்களே சிறந்த ஆசிரியர்கள். அவர்களுள் பண்டிதர் க.செல்லத்துரை ஒருவர்.


தமிழிலும் ஆங்கிலத்திலும் புலமையுடைய பண்டிதர் க.செல்லத்துரை தமிழ், ஆங்கிலம், இந்துசமயம் ஆகிய பாடங்களைக் கற்பிப்பார். இவரிடம் தமிழ் மொழியினைப் பயிலும் வாய்ப்பு எனக்கு பத்தாம் வகுப்பில் கிடைத்தது. இவரிடம் சிறந்த கற்பித்தல் ஆற்றலைவிட மேலும் பல சிறந்த நற்பண்புகள் காணப்பட்டது. கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்பவற்றின் முக்கியத்துவத்தைப் பற்றி அடிக்கடி எடுத்துக் கூறுவதுடன் நின்றுவிடாது அந்தப் பண்புகளைக் கடுமையாக கடைப்பிடித்து எல்லோருக்கும், முக்கியமாக மாணவர்களுக்கு எடுத்துக்காட்டாக விளங்கினார். இவரது சிறந்த நற்பண்புகளை மாணவனாக இருந்த காலத்தில் மட்டுமன்றி ஏறத்தாழ நாற்பத்தைந்து வருடங்களுக்குப் பின்பும் என்னால் எண்ணிப் பார்க்க முடிகின்றது.

இவர் எப்போதும் காலை ஏழரை மணிக்கே பாடசாலைக்கு வந்து தனது கடமைகளை ஆரம்பித்துவிடுவார். வகுப்புகளுக்கும் நேரம் தவறாது வந்து முழுநேரத்தினையும் பயனுறுதிமிக்க வகையில் செலவு செய்வார். ஒவ்வொரு மாணவனைப் பற்றியும் சரியான முறையில் அறிந்து அவர்கள் மீது தனிப்பட்ட கவனத்தினைச் செலுத்துவார். தேவை ஏற்படும் வேளைகளில் மாணவர்களின் முன்னேற்றத்திற்காக மேலதிக நேரத்தினைச் செலவு செய்ய ஒருபோதும் பின்நின்றதில்லை. மாணவர்களின் பயிற்சிப் புத்தகங்களை திருத்துவதிலும் மாணவர்களது ஐயங்களைத் தெளிவுபடுத்துவதிலும் மிகுந்த நாட்டமுடையவர்.

மாணவர்களின் முன்னேற்றத்தினையும் அவர்கள் வாழ்க்கையில் நல்ல நிலையை அடையவேண்டும் என்ற உயர்ந்த சிந்தனைகளையுமே குறிக்கோளாகக் கொண்டு அதற்காக தனது சேவையை வழங்கிய ஒரு சிறந்த ஆசிரியர். யாழ் இந்துவில் இவருடைய முப்பத்திரண்டு வருட ஆசிரிய சேவைக் காலத்தில் நீண்ட நாட்கள் விடுமுறை செல்லாத ஒரு ஆசிரியர் இவர். இவரது வாழ்க்கை மாணவர்களுக்கு மட்டுமன்றி சகலருக்கும் குறிப்பாக எல்லா ஆசிரியர்களுக்கும் முன்மாதிரியாகவும் வழிகாட்டியாகவும் அமையும்.

**த.ஜெயராமன்** - யாழ் இந்துக் கல்லூரி

* * * * *


Ranjana Fashion
Shop under one roof
for all your
Fashion
needs
T : (03) 9803 3503
M : 0433 334 489 / 0403 114 783
Email : leopillaij@hotmail.com
258 Blackburn Road,
Glen Waverley 3150

# வெற்றி பெறுவது எப்படி?



நம் அனைவருக்கும் வாழ்வில் வெற்றி பெறவேண்டும் என்ற எதிர்பார்ப்பு என்றுமே உள்ளது. நல்ல நூல்களை வாசித்தல் மற்றும் வெற்றிபெற்றோர்களின் வாழ்க்கையைப் பற்றி அறிந்துகொள்ளல் இதற்கு உதவி புரியும்.

ஆயிரத்துக்கு மேற்பட்ட கண்டுபிடிப்புக்களின் காப்புரிமையைப் பெற்ற தோமஸ் அல்வா எடிசன் ஆயிரம் வகையான இழைகளைப் பயன்படுத்தி முயற்சி செய்த பின்னர்தான் மின்குமிழைக் கண்டுபிடித்தார். ஒவ்வொரு தோல்வியடைந்த முயற்சியும் அவரின் வெற்றிக்கு உந்துகோலாக அமைந்து சரியான பாதையில் அடி எடுத்து வைக்க உதவியது. அவரது வெற்றிக்குத் தணியாத உற்சாகமும், ஊக்கமும், தொடர் முயற்சியும் தான் காரணம். மின்சார விளக்குகள், கிராமபோன், இசைத்தட்டுக்கள், அசையும் படம், பேசும் படம் மற்றும் கம்பியில்லாத் தந்தி எனப் பல கண்டுபிடிப்புக்களின் சொந்தக்காரரான அவர் இலக்கை நோக்கிய தொடர் முயற்சியால் வெற்றியடைந்த மாமனிதர். அவரது வாழ்க்கை எமக்கு நல்ல பாடமாக அமைகின்றது.

ஒரு காரியத்தைச் செய்வதற்கு மனிதனுக்கு மிக அவசியமானது அச்செயல் மீது கொண்ட ஆர்வமே. இதையே அப்துல் கலாம் அவர்களும் “கனவு காணுங்கள்” எனக் குறிப்பிடுகின்றார். எது ஒரு மனிதனைத் தூங்கவிடாது அவனை எந்நேரமும் உறுத்துகின்றதோ அதுவே இலட்சியத்தை அடைவதற்கான கனவாகும்.

ஒரு விடயத்தைச் செய்யும்போது பொறுப்பேற்றுக்கொள்ளும் தன்மையும் வாழ்க்கையில் எங்களை உயர்த்துகின்றது. அப்துல் கலாம் அவர்கள் முதன்முறையாகக் கண்டு பிடித்த ஏவுகணை ஏவியச் சற்று நேரத்தில் விழுந்து விட்டது. “இவ் ஏவுகணைச் சோதனை வெற்றி பெறாமைக்கு எனது தவறே காரணம்” எனப் பொறுப்பேற்ற அவர் பின் ஏவுகணையை வெற்றிகரமாக ஏவியபோது “வெற்றியின் இரகசியம் அனைவரதும் கடின உழைப்பே” எனக் கூறினார்.

வாழ்க்கையில் எம்மைப் பற்றி குறை கூறுபவர்களையோ அல்லது விமர்சிப்பவர்களையோ கண்டு நாங்கள் சந்தோஷப்பட வேண்டும். ஏனெனில் நாம் மேலும் முன்னேற எமக்கு அவர்கள் ஓர் உந்துகோலாக இருக்கிறார்கள்.

# For quality goods just visit us




## Exclusive Grocery shop for South Indians & Sri Lankans






- Take Away & Eat In
- We Cater for All Occasions
- Vegetarian & Non Vegetarian Foods

20 Boundary Road, Carrum downs (Near Shiva Vishnu Temple)

Ph: 9782 8611 | Fax: 9782 8011 | Mel Ref 98 G 10

எமது முயற்சியை ஒரு நிலையுடன் நிறுத்தி கொள்ளக்கூடாது. எம்மால் எழுந்து உட்கார முடியுமானால் நடக்க முயற்சிக்க வேண்டும். நடக்க முடியுமானால் ஓட முயற்சிக்க வேண்டும். ஓட முடியுமானால் அடுத்து பாய முயற்சிக்க வேண்டும். இவ்வாறு வாழ்வின் அடுத்த நிலைகளுக்கு எம்மைத் தயார்ப்படுத்தி அதற்கான முயற்சிகளைத் தொடர்ந்து முன்னெடுப்போமாயின் வாழ்வில் முன்னேற்றம் காணலாம். ஓட்டப்பந்தய வீரர் உசையின் போல்ட் கடந்த மூன்று ஒலிம்பிக் பந்தயங்களில் ஒன்பது தங்கப் பதக்கங்களை வென்றெடுத்தார். இவரது போட்டிகள் சிலபல வினாடிகளுக்குட்பட்டவையே. இருப்பினும் அந்த வெற்றிகளுக்காக அவர் பதினைந்து வருடங்கள் அயராது உழைத்திருக்கின்றார். அவரது அர்ப்பணிப்பும் கடின உழைப்புமே இந்த வெற்றிக்குக் காரணம்.

வாழ்க்கையில் எந்தச் சவால்களையும் எமக்குச் சாதகமாக மாற்றிக்கொள்ளும் மனப்பாங்கை வளர்த்துக்கொள்ள வேண்டும். சுவாமி சிந்மயானந்தர் ஒருமுறை விமானப் பயணித்தின்போது விமானம் தரையிறங்குவதில் ஏற்பட்ட தடங்கலால் மிக நீண்ட நேரமாக வானில் பறந்து பின் தரையிறங்கியது. பயணக் களைப்பும் மன விரக்தியும் பயணிகளிடம் தெரிந்தது. இப்பயணத்தில் தங்களுக்கு மன உளைச்சல் ஏற்படவில்லையா என சுவாமி சிந்மயானந்தா அவர்களிடம் ஒருவர் வினாவினார். அதற்கு அவர் "இன்று மகிழ்ச்சியாயிருக்கிறேன் ஏனெனில் மிகக் குறைந்த கட்டணத்தில் விமானத்தில் பலமணி நேரம் பயணம் செய்திருக்கின்றேன்" என பதிலளித்தார். எது நடந்தாலும் அதை ஏற்றுக் கொள்ளும் மனப்பாங்கும் வாழ்க்கையை வெற்றிப்பாதையில் முன்நோக்கிச் செல்ல உதவும்.

நம்பிக்கையையும் நினைத்ததை முடிக்கும் ஆற்றலையும் நாம் வளர்த்துக் கொள்ள வேண்டும். அந்த வகையில் கடல் நடுவில் இருந்த குன்றின் மீது தியானம் செய்ய விரும்பிய சுவாமி விவேகானந்தர், படகோட்டி உதவாத நிலையில் கடலில் நீந்திச் சென்று அப்பாறையில் தியானம் செய்தார். மற்றவர்கள் உதவாதபோதும் நாம் நினைத்ததை முடிக்கவேண்டும் என்ற திடசங்கற்பம் கொண்டு எடுத்த காரியத்தைச் செய்து முடிக்கும் ஆற்றலை எம்முள்ளே வளர்த்துக்கொள்ள வேண்டும்.

அப்துல் கலாம் அவர்கள் குறிப்பிட்டது போல நம் அனைவருக்கும் வாழ்க்கையில் சாதிப்பதற்கு இறைவன் ஒவ்வொரு சந்தர்ப்பத்தைத் தந்திருக்கின்றான். அதைச் சிறந்த முறையில் பயன்படுத்த வேண்டும். நமது பிறப்பு ஒரு விபத்தாக இருந்தாலும், இறப்பு ஒரு சாதனைப் புத்தகமாக இருக்க வேண்டும்.

**தொகுப்பு**

**சொ.ஹரிசங்கர் –** ஆசிரியர், யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி

*with the best complements from*

# DIVYA INDIAN GROCERIES




FRESHLY OPENED IN
WANTIRNA SOUTH

SELLING INDIAN,NEPALESE,
SRILANKAN,FIJIAN GROCERIES
UNDER ONE ROOF





*OPENING HOURS:*
*OPEN 7 DAYS*
*10.30 AM -7.00PM (WINTER)*
*10.30 AM-8.00PM (OTHER SEASON)*

find us on facebook
DIVYA INDIAN GROCERIES



**DIVYA INDIAN GROCERIES**
104 COLEMAN ROAD,BORONIA.VICTORIA 3155
T: 03 88390168 M: 0413 237 673
MELWAY:64C9

# வாழ்க்கைக்கு நல்ல வழிமொழிகள்

எமது மூதாதையர் அழகு தமிழில் வாழ்க்கையைச் சீராக அமைப்பதற்காக பல பழமொழிகளைத் தந்து சென்றுள்ளனர். அவற்றில் சிலவற்றை நாம் அதன் விளக்கங்களுடன் அறிய முயல்வோம்.

✶ ***நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்***



எம்மிடம் எத்தனை செல்வங்கள், அவை பொருளாகவோ அல்லது கல்வியாகவோ இருப்பினும் அவை எம்மைப் பிறர் போற்றும்படி உயர்த்திவைத்தாலும் நாம் சுகதேகியாக இருந்தாலேயே அவற்றை முழுமையாக அனுபவிக்கமுடியும். எவனொருவன் உடல் ஆரோக்கியமாக நோய்நொடியற்று இருக்கின்றானோ, அவன் மிகுந்த ஏழையாயினும், வாழ்க்கையைத் தானும் அனுபவித்து மற்றவர்க்கும் பயனுள்ள செல்வமாக இருப்பான் என்பது இதன் பொருளாகும்.

✶ ***அடிமேல் அடி அடித்தால் அம்மியும் நகரும்***

பெரிய பாறாங்கல்லை ஒரே தடவையில் எமது சக்தியை பிரயோகித்து அகற்றிவிட முடியாது. நாம் எடுக்கும் தொடர்ச்சியான முயற்சியினால் அதனை அகற்றிவிடலாம். அதே போல நாம் எந்த பெரிய சாதனையையும் உடனடியாக எமது முழுமுயற்சியையும் பிரயோகித்தாலும் அடைந்து விடமுடியாது. படிப்படியாக தொடர்ந்து எடுக்கும் தகுந்த முயற்சிகளால், எமது இலக்கை அடைந்து விடமுடியும்.

✶ ***அகத்தின் அழகு முகத்தில் தெரியும்***

ஒருவரைப் பார்க்கும் போதே அவரின் நல்ல பண்புகளையும் உயரிய குணங்களையும் தெரிந்து கொள்ளமுடியும். முகத்தில் நடிப்பாக உதிரும் போலி அன்பை அல்லது சிரிப்பை சிறிது நாட்கள் பழக்கத்தில் புரிந்து கொள்ளலாம். மனத்தில் தீய எண்ணங்களும், பொறாமை, வஞ்சகம், கோபம், காமம் கொண்டவர்களை எளிதாக முகத்திலிருந்தே புரிந்து கொள்ளமுடியும்.

✶ ***அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு***

